*கவனிக்க.-2019.03.29 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2118 - 2019 අප්‍රේල් මස 05 වැනි සිකුරාදා - 2019.04.05

2118 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | | | |
|---|---|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - | அரசாங்க அறிவித்தல்கள் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - | விலைக் கட்டளைகள் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 648 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - | மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) அரச காணி (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் 2019, மாச்சு மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) மோட்டார் வாகனம் (திருத்தம்) சட்டமூலம் 2019, மாச்சு மாதம் 29 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படுந் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகுந் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2019, ஏப்பிறல் மாதம் 26ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டு மென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்காணி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

647-B 81510-403 (2019/03)

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## கார்கில்ஸ் வங்கி லிமிடெட் - மாத்தறை கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேடஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் வங்கியின் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

வாடிக்கையாளரின் பெயர் : குணரத்ன குறுாப் ஒவ் கம்பனீஸ் (பிறைவேட்) லிமிடெட்

2019.02.22 ஆந் திகதியன்று நடைபெற்ற கார்கில்ஸ் வங்கி லிமிடெட்டின் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது:

கடப்பாட்டாளராக குணரத்ன குறுாப் ஒவ் கம்பனீஸ் (பிறைவேட்) லிமிடெட்டும் ஈடுவைப்பவராக டிமிங்கு விதானகே பேர்ஸி குணரத்ன என்பவரும் PB 4847 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்ட கார்கில்ஸ் வங்கி லிமிடெட் சார்பில் நிறைவேற்றப்பட்டதும், பிரசித்த நொத்தாரிசு ரஜீந்திர நாராங்கொட என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான 2016.08.23 ஆந் திகதிய 1640 ஆம் இலக்க ஈட்டுமுறி மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணைதவறியுள்ளனர் ஆதலாலும்;

அத்துடன் (இதனகத்துப் பின்னர் சில வேளைகளில் "வங்கி" எனவழைக்கப்படும்) கார்கில்ஸ் வங்கி லிமிடெட்டுக்கு 1640 ஆம் இலக்கத்தைக் கொண்ட சொல்லப்பட்ட ஈட்டுமுறி மீது ஏழு மில்லியன் எழுநூற்று முப்பத்தேழாயிரத்து எழுநூற்றியொன்பது ரூபா ஐந்து சதம் (ரூபா 7,737,709.05) கொண்ட தொகை 2018.12.11 ஆந் திகதியிலிருந்து முழுமையாகக் கொடுப்பனவு செய்யப்படும் திகதி வரை ரூபா 7,333,333.44 கொண்ட தொகை மீது ஆண்டொன்றுக்கு 19.53% வட்டியுடன் சேர்த்து 2018.12.10 ஆந் திகதி வரையிலான முதலும் வட்டியும் என்ற கணக்கால் இப்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் வந்துள்ளது ஆதலாலும்.

இத்தால் பின்வருமாறு தீர்மானிக்கப்படுகின்றது:-

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் நியதிகளின்படி, இதற்கான அட்டவணையில் மேலும் விபரமாக விவரிக்கப்பட்டவையும் 1640 ஆம் இலக்கத்தைக் கொண்ட ஈட்டுமுறியினால் கடப்பாட்டாளராக குணரத்ன குறுாப் ஒவ் கம்பனீஸ் (பிறைவேட்) லிமிடெட்டினால் மற்றும் ஈடுவைப்பவராக டிமிங்கு விதானகே பேர்ஸி குணரத்ன என்பவரினால் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டவையுமான ஆதனங்களை, சொல்லப்பட்ட ஏழு மில்லியன் ஏழு நூற்றி முப்பத்தேழாயிரத்து எழுநூற்றியொன்பது ரூபா ஐந்து சதம் (ரூ. 7,737,709.05) கொண்ட தொகையையும் மேற்கூறப்பட்ட திகதியிலிருந்து விற்பனைத் தேதிவரை மேற்கூறப்பட்டவாறான வட்டியையும் சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ் அறிவிடப்படற்பாலனவான செலவு தொகைகளையும் பணங்களையும், பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து, பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்வதற்கு கொலன்னாவ, விஹார மாவத்தை, 182/ 3, (50/ 3) ஆம் இலக்கத்திலுள்ள உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளர் துசித கருணாரத்ன என்பவருக்கு அதிகாரமளிக்கப்படுதலும் தத்துவமளிக்கப்படுதலும் வேண்டுமென்றும்.

### அட்டவணை

1. தென் மாகாணம், காலி மாவட்டத்தில் காலி பிரதேச செயலக எல்லைகளின் நான்கெல்லைகளினுள்ளும் காலி மாநகரசபை எல்லைகளினுள்ளும் இல. 102 - ததல்ல மேற்கு கிராம அலுவலர் பிரிவினுள் ததல்லவில் அமைந்துள்ளதும், அதன்மீதுள்ள மண், மரங்கள், கட்டிடங்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் கொழும்பு வீதியில் - 422 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட வளவுகளினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஆர். எஸ். வீரசேக்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2016.3.9 ஆந் திகதிய 3736 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டம் 8A என்ற அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 8A பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு : அதே காணியின் காணித்துண்டங்கள் 7 மற்றும் A; கிழக்கு : அதே காணியின் காணித்துண்டங்கள் A மற்றும் 9; தெற்கு : அதே காணியின் காணித்துண்டம் 9 மற்றும் காலியிலிருந்து கொழும்பு வரையிலான பெருவீதி அத்துடன் மேற்கில் காலியிலிருந்து கொழும்பு வரையிலான பெருவீதி மற்றும் அதே காணியின் காணித்துண்டம் 7; பரப்பளவில் இது, 3736 ஆம் இலக்க வரைபடத்தின்படி ஆறு தசம் ஐந்து இரண்டு பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 6.52பே.) அல்லது 0.0165 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளதுடன் காலிக் காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் Q 141/95 இல் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

2. தென் மாகாணம், காலி மாவட்டத்தில் காலி பிரதேச செயலக எல்லைகளின் நான்கெல்லைகளினுள்ளும் காலி மாநகரசபை எல்லைகளினுள்ளும் இல. 102 - ததல்ல மேற்கு கிராம அலுவலர் பிரிவினுள் ததல்லவில் அமைந்துள்ளதும், அதன்மீதுள்ள மண், மரங்கள், கட்டிடங்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் கொழும்பு வீதியில் - 422 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட வளவுகளினதாய் உரிமம்பெற்ற நில அளவையாளர் ஆர். எஸ். வீரசேக்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2016.3.9 ஆந் திகதிய 3736 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டம் 10A என்ற அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட

காணித்துண்டம் 10A பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு : அதே காணியின் காணித்துண்டங்கள் 9 மற்றும் A ; கிழக்கு : அதே காணியின் காணித்துண்டம் A மற்றும் ததல்ல பொதுமயானம்; தெற்கு : ததல்ல பொதுமயானம் மற்றும் காலியிலிருந்து கொழும்பு வரையிலான பெருவீதி அத்துடன் மேற்கில் காலியிலிருந்து கொழும்பு வரையிலான பெருவீதி மற்றும் அதே காணியின் காணித்துண்டம் 9; பரப்பளவில் இது, 3736 ஆம் இலக்க வரைபடத்தின் படி ஒன்பது தசம் ஏழு ஆறு பேர்ச்சு (0ஏ. 0றூ. 9.76பே.) அல்லது 0.0247 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளதுடன் காலிக் காணிப் பதிவகத்தில் தொகுதி/ பக்கம் Q 139/31 இல் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

பணிப்பாளர்களின் கட்டளைப்படி,

சமீல அபேசூரிய,
தலைவர் - அறவீடுகள்.

4-14

---

### மக்கள் வங்கி - கந்தாளை (090) கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் கீழான தீர்மானம்*

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2018, திசெம்பர் 18 ஆந் திகதி தமது கூட்டத்தில் கீழே காணப்படும் தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக இத்துடன் அறியத்தருகின்றோம்.*

"திருகோணமலை பிரசித்த நொத்தாரிசு திரு. திலகரத்னம் துஷ்யந்தன் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.12.26 ஆந் திகதியுடைய 5559 ஆம் இலக்க ஈட்டு முறி மற்றும் திருகோணமலை பிரசித்த நொத்தாரிசு திரு. திசாநாயக முதலிகே பிரபாத் சமீர திசாநாயக அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.03.30 ஆந் திகதியுடைய 280 ஆம் இலக்கஈட்டு முறி என்பவற்றுக்கு ஏற்ப, இல. 100, யுனிடி 14, வென்ராசன்புரம் கந்தளை என்ற முகவரியில் வசிக்கின்ற ராஹுபெத்த கம்கானம்லாகே சிசிர குமார என்பவரால் கொடுப்பனவை செலுத்துவதிலிருந்து தவணை தவறியிருப்பதால், சொல்லப்பட்ட ஈட்டு முறிகளின் கீழ் தற்போது முறையாக நாற்பத்தைந்து இலட்சத்து எண்பத்து மூவாயிரத்து முந்நூற்று முப்பத்து மூன்று ரூபா முப்பத்தைந்து சதம் (ரூபா 45,83,333.35) தொகை மற்றும் எழுபத்தெட்டு இலட்சம் ரூபா (ரூபா 78,00,000.00) தொகை மக்கள் வங்கிக்கு வருமதியானதாக உள்ளதால், சொல்லப்பட்ட நாற்பத்தைந்து இலட்சத்து எண்பத்து மூவாயிரத்து முந்நூற்று முப்பத்து மூன்று ரூபா முப்பத்தைந்து சதம் (ரூபா 45,83,333.35) தொகை மற்றும் எழுபத்தெட்டு இலட்சம் ரூபா (ரூபா 78,00,000.00) தொகைக்கு முறையே 2018.05.29 மற்றும் 2018.07.01 ஆந் திகதிகளிலிருந்து வருடத்துக்கு முறையே 21% சதவீதம் மற்றும் 16.5% சதவீத அடிப்படையில் ஏல விற்பனைத் திகதி வரை மேலதிக வட்டியையும் உரிய மக்கள் வங்கிச் சட்டத்தின் 29(L) பிரிவின் கீழ் மீட்டுக்கொள்ளப்பட வேண்டிய தொகை மற்றும் கட்டணங்களையும் மற்றும் எவையேனும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் அவற்றைக் கழித்து நாற்பத்தைந்து இலட்சத்து எண்பத்து மூவாயிரத்து முந்நூற்று முப்பத்து மூன்று ரூபா முப்பத்தைந்து சதம் (ரூபா 45,83,333.35) தொகை மற்றும் எழுபத்தெட்டு இலட்சம் ரூபா (ரூபா 78,00,000.00) தொகையையும் மீட்டுக் கொள்வதற்காக கண்டி உத்தரவு பெற்ற ஏல விற்பனையாளர் சொக்மன் என்ட் சமரவிக்ரம என்ற நிறுவனத்தால் சொல்லப்பட்ட முறையே 5559 மற்றும் 280 ஆம் இலக்கங்களைக் கொண்ட ஈட்டு முறிகளின் கீழ் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனங்கள் மற்றும் அவற்றுக்கு சேர்ந்த சகல விடயங்களையும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29 D பிரிவின் கீழ் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் அடிப்படையில் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது."

#### ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனம் தொடர்பான விபரம்

கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டத்தில், கந்தளை பிரதேச செயலாளர் பிரிவில் வென்ராசன்புரம் கிராம அலுவலர் பிரிவில் கந்தளை பிரதேச செயலக எல்லைகளுக்குள் வட்டார இலக்கம் R/30/ 2, 92 மைற் கல் சந்தி கந்தளையில் அமைந்துள்ள காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே. செல்லப்பிள்ளை அவர்களால் 2003.09.29 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 3504 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டம் 01 என்ற காணிக்கு அத்தகைய வரைபடத்துக்கேற்ப, எல்லைகள் பின்வருமாறு - வடக்கு: டப்ளியூ. எம். டிங்கிரி அம்மா அவர்களால் உரிமை கோரப்படுகின்ற இந்தக் காணியின் எஞ்சிய பாகம்; கிழக்கு: கண்டி வீதி; தெற்கு: கால்வாய்; மேற்கு: கால்வாய் மற்றும் 3504 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டம் 02 ஆகிய எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணியின் விஸ்தீரணம் றூட் ஒன்று (00ஏ. 01றூ. 00பே.) மற்றும் அதனகத்தே அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், பிரயோசனங்கள் போன்ற சகலதையும் உள்ளடக்கியது.

#### மேலே குறிப்பிட்ட காணி கீழ்க் குறிப்பிடப்படும் காணியின் தற்போதை அளவீடாகும்

கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டத்தில், கந்தளை பற்று, கந்தளை பிரதேச சபை எல்லைகளுக்குள் கந்தளை பிரதேச செயலாளர் பிரிவில் வென்ராசன்புரம் கிராம அலுவலர் பிரிவில் கந்தளை கிராமத்தில் அமைந்துள்ள "கந்தளை" என அழைக்கப்படுகின்ற காணியின் எல்லைகள் - வடக்கு: டப்ளியூ. எம். டிங்கிரி அம்மா அவர்களால் உரிமை கோரப்படுகின்ற காணி; கிழக்கு: கண்டி - திருகோணமலை

வீதி; தெற்கு: வடிகால் கால்வாய்; மேற்கு: வடிகால் கால்வாய். ஆகிய எல்லை களுக்குள் அமைந்துள்ள காணியின் விஸ்தீரணம் றூட் ஒன்று (0ஏ. 1றூ.0பே.) மற்றும் அதனகத்தே அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், பிரயோசனங்கள் போன்ற சகலதையும் உள்ளடக்கியது.

இந்த ஆதனம் திருகோணமலை காணிப் பதிவகத்தில் LDO/P/12/53 மற்றும் LDO/P/20/182 என்ற இருமடியிலக் கங்களில் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பீ. ஆர். எஸ். கோதாகொட,
பிராந்திய முகாமையாளர்.

மக்கள் வங்கி,
பிராந்திய தலைமை அலுவலகம்,
திருகோணமலை.
தொலைபேசி இல. 026-2222815, 026-2223047
தொலைநகல் : 026-2220395 .

பிரசித்த நொத்தாரிசு திலகரத்னம் துஷ்யந்தன் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.12.26 ஆந் திகதியுடைய 5559 ஆம் இலக்க ஈட்டுமுறி மற்றும் திருகோணமலை பிரசித்த நொத்தாரிசு திரு. திசாநாயக முதலிகே பிரபாத் சமீர திசாநாயக அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.03.30 ஆந் திகதியுடைய 280 ஆம் இலக்க ஈட்டு முறி ஆகிய இரண்டிலும் குறிப்பிடப்பட்ட விபரங்களுடன் சரிபார்க்கப்பட்டன என உறுதிப்படுத்துகின்றேன்.

சசி பிரபா ஜயதிஸ்ஸ,
உதவி சட்ட அதிகாரி.

2019, மாச்சு 13.

4-186

---

## பேன் ஏசியா வங்கித் தொழிற் கூட்டுத்தாபனம் பீ.எல்.சீ.- மாத்தறைக் கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்களினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பேன் ஏசியா வங்கித் தொழிற் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

வாடிக்கையாளர்களின் பெயர்கள் : மொஹமட் ஷாபீக் மொஹமட் ரிஸ்னி மற்றும் பாத்திமா முனீரா ரிஸ்னி (கன்னிப்பெயர் ஜூனேத்)

"பேன் ஏசியா வங்கித்தொழிற் கூட்டுத்தாபனம் பீஎல்சீ இன் பணிப்பாளர் சபையினால் 2019, பெப்புருவரி 27 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கடப்பாட்டளர்களாக மொஹமட் ஷாபீக் மொஹமட் ரிஸ்னி மற்றும் பாத்திமா முனீரா ரிஸ்னி (கன்னிப்பெயர் ஜூனேத்) என்போர் அத்துடன் ஈடுவைப்பவராக பாத்திமா முனீரா ரிஸ்னி (கன்னிப்பெயர் ஜூனேத்) என்பவர், பீ.கிவ். 48 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்ட பேன் ஏசியா வங்கித்தொழிற் கூட்டுத்தாபனம் பீஎல்சீ இன் சார்பில் மாத்தறையைச் சேர்ந்த பிரிசித்த நொத்தாரிசு பீ. ஜீ. சீ. நாணயக்கார என்பவரினால் இரண்டும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014.11.28 ஆந் திகதிய 14843 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும் 14845 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணைதவறியுள்ளனராதலாலும்,

அத்துடன் 2019.01.15 ஆந் திகதிவரை முதலினதும் வட்டியினதும் கணக்கால் பத்தொன்பது மில்லியன் இரு நூற்றி எழுபத்தேழாயிரத்து இருநூற்றியறுபத்தொன்பது ரூபா ஐம்பத்தாறு சதம் (ரூபா 19,277,269.56) கொண்ட தொகையும் 2019.01.16 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதிவரை பதினெட்டு மில்லியன் தொளாயிரத்து பதின்மூன்றாயிரம் ரூபா (ரூபா 18,913,000.00) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு 21 % வட்டியும் சொல்லப்பட்ட 14843 ஆம், 14845 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மீது (இதனகத்துப்பின்னர் சில வேளைகளில் "வங்கி" எனவழைக்கப்படும்) பேன் ஏசியா வங்கித் தொழிற் கூட்டுத்தாபனம் பீஎல்சீ இக்கு இப்போது வருமதியாகவும் சேரவேண்டியதாகவும் உள்ளதாதலாலும்.".

இத்தால் பின்வருமாறு தீர்மானிக்கப்படுகின்றது:

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் நியதிகளின்படி, கொலன்னாவ, விஹார மாவத்தை, 50/3 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த உரிமம்பெற்ற ஏலதாரர் துசித்த கருணாரத்ன என்பவருக்கு, மேற்கூறப்பட்ட திகதிகளிலிருந்து விற்பனைத் திகதிவரை மேற்கூறப்பட்டவாறான வட்டியுடன் சேர்த்து சொல்லப்பட்ட பத்தொன்பது மில்லியன் இருநூற்றி எழுபத்தேழாயிரத்து இருநூற்றியறுபத்தொன்பது ரூபா ஐம்பத்தாறு சதம் (ரூபா 19,277,269.56) கொண்ட தொகையையும் சொல்லப்பட்ட1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ் அறவிடப்படற்பாலனவான செலவுதொகைகளையும் பணங்களையும் அதன்பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் மேலும் விபரமாக விபரிக்கப்பட்டவையும் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டவையுமான ஆதனங்களைப் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்வதற்கு அதிகார மளிக்கப்பட்டு தத்துவமளிக்கப்படுதல் வேண்டுமென்றும்,

### அட்டவணை

1. தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெல்லபொட பத்துவில் டிக்வெல்ல பிரதேச செயலாளர் இடப்பரப்பினுள்ளும் டிக்வெல்ல பிரதேச சபை எல்லைகளினுள்ளும் டிக்வெல்ல தெற்கு கிராம அலுவலர் எல்லைகளில், டிக்வெல்லயில் அமைந்துள்ளதும் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் பி. ஜீ.

கருணாதாச என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2007.02.23 ஆந் திகதிய 2413 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும் ஹுபுகபுகேவத்தவின் காணித்துண்டம் 4 மறுபெயர் D மற்றும் ஹுபுகபுகேவத்தவின் காணித்துண்டம் 5 மறுபெயர் காணித்துண்டம் E எனவழைக்கப்படும் ஒன்றுசேர்க்கப்பட்ட காணிகளின் பிரிக்கப்பட்டுத் தனிவேறாக்கப்பட்ட காணித்துண்டம் B இனதாய் அதன்மீதுள்ள மண், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வேறெல்லாவற்றினதும் முழுமை அடங்கலும் சொல்லப்பட்ட காணித்துண்டம் B பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில்: அதேகாணியின் காணித் துண்டம் C; கிழக்கில்: 2413 ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டம் C; தெற்கில்: கன்கானம்கே பிட்டவத்த கொறட்டுவ மற்றும் வெஹெல்ல பிரதேச சபை வீதி அத்துடன்; மேற்கில்: 2413 ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டம் A, பரப்பளவில் இது, முப்பத்தைந்து பேர்ச்சு (0ஏ. 0றூ. 35பே.) கொண்டுள்ளதுடன் மாத்தறை மாவட்டக் காணிப்பதிவகத்தில் G 35/125 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுமுள்ளது.

2. தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெல்லபொட பத்துவில் டிக்வெல்ல பிரதேச செயலாளர் இடப்பரப்பினுள்ளும் டிக்வெல்ல பிரதேச சபை எல்லைகளினுள்ளும் டிக்வெல்ல தெற்கு கிராம அலுவலர் எல்லைகளில், டிக்வெல்லக் கிராமத்தில் பழைய பெலியத்த வீதியில் அமைந்துள்ளதும் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ். எல். கலப்பத்தி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1999.11.28 ஆந் திகதிய 5137 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக் காட்டப்பட்டதும் ஹுபுகபுகேவத்த மற்றும் அவரியவத்த எனவழைக்கப்படும் காணியின் காணித்துண்டம் E இன் பிரிக்கப்பட்டுத் தனிவேறாக்கப்பட்ட காணித்துண்டம் 1 இனதாய் அதன் மீதுள்ள மண், பயிர்கள் கட்டிடங்கள் மற்றும் வேறெல்லாவற்றினதும் முழுமை அடங்கலும். சொல்லப்பட்ட காணித்துண்டம் 1 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில்: அதேகாணியின் காணித்துண்டம் D; கிழக்கில்: அதேகாணியின் காணித்துண்டம் 3; தெற்கில்: அதே காணியின் காணித்துண்டம் 4 மற்றும் அதே காணியின் காணித்துண்டம் 5 எனவடையாளமிடப்பட்ட வீதி அத்துடன்; மேற்கில்: பிரதான வீதி, பரப்பளவில் இது, ஒன்பது தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 9.50பே.) கொண்டுள்ளதுடன் மாத்தறை, மாவட்டக் காணிப் பதிவகத்தில் G35/124 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுமுள்ளது.

சொல்லப்பட்ட காணி மிக அண்மையில் மீள்நில அளவையிடப்பட்டு புதிய நிலஅளவையின்படி பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது.

மேற்கூறப்பட்ட டிக்வெல்லக் கிராமம் பழைய பெலியத்த வீதியில் அமைந்துள்ளதும் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் பி. ஜீ. கருணாதாச என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2010.04.09 ஆந் திகதிய 2810 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும் ஹுபுகபுகேவத்த மற்றும் அவரியாவத்த எனவழைக்கப்படும் காணியின் பிரிக்கப்பட்டுத் தனிவேறாக்கப்பட்ட காணித்துண்டம் E இன் காணித்துண்டம் 1 இனதாய் அதன்மீதுள்ள மண், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வேறெல்லாவற்றினதும் முழுமை அடங்கலும், சொல்லப்பட்ட காணித்துண்டம் 1 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில்: அதேகாணியின் காணித்துண்டம் D; கிழக்கில் : அதே காணியின் காணித்துண்டம் 3 (வரைபட இல. 5137); தெற்கில்: அதே காணியின் காணித்துண்டம் 5 மற்றும் காணித்துண்டம் 4 அத்துடன்; மேற்கில்: டிக்வெல்ல பெலியத்த பழைய வீதி, பரப்பளவில் இது, ஒன்பது தசம் ஐந்து பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 9.5பே.) அல்லது 0.0240 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளதுடன்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ராஜித கருணாதிலக்க,
முகாமையாளர் - அறவீடுகள்

4-147/1

---

## பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. - குளியாபிட்டி கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள் ) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

வாடிக்கையாளர்களின் பெயர்கள்: மஹரகே த்ரினி ரொஹான் சாந்தன பெரேரா மற்றும் அட்டம்பொல ஆரச்சிகே தொன் பெலின்டஸ் இரோஷா தமயந்தி

ஆதனத்தின் முகவரி : எட்டம்பகஹமுலஹேன, கையால, குளியாப்பிட்டி.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் 2019.02.27 ஆந் திகதியன்று நடைபெற்ற பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப.வ.க. இன் பணிப்பாளர் சபை கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது :-

"கடப்பாடுடையவர்களான மஹரகே த்ரினி ரொஹான் சாந்தன பெரேரா மற்றும் கடப்பாடுடையவரான/ ஈடுவைத்தவரான அட்டம்பொல ஆரச்சிகே தொன் பெலின்டஸ் இரோஷா தமயந்தி ஆகியோர் பதிவு இல. பிகியூ 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப. வ. க. இன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு டீ. வீ. டீ. ஆர். அங்கம்மன அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2013.09.04 ஆந் திகதிய இல. 5722 மற்றும் 2015.12.11 ஆந் திகதிய 6204 ஆகிய ஈட்டு முறிகளின் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளனர்,

பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப.வ.க. (இதனகத்துப் பின்னர் சில வேளைகளில் "வங்கி" என அழைக்கப்படும்) இற்கு மேற்சொல்லப்பட்ட ஈட்டு முறி

இலக்கங்கள் 5722 மற்றும் 6204 இன் மூலம் 2018.10.02 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஆறு மில்லியன் எழுநூற்று எட்டாயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று எட்டு ரூபா ஐம்பத்து மூன்று சதம் (ரூபா 6,708,898.53) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு இருபத்தொரு வீத (21%) வருடாந்த வட்டியுடனும் சேர்த்து பணமுதல் கணக்கின் மீது ரூபா 6,367,907.06 கொண்ட தொகையும் மற்றும் 2018.10.03 ஆந் திகதி வரையிலான வட்டியுடன் தற்போது வரவேண்டியுள்ளது,

மேற்சொல்லப்பட்ட தொகை ஆறு மில்லியன் எழு நூற்று எட்டாயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று எட்டு ரூபா ஐம்பத்து மூன்று சதம் (ரூபா 6,708,898.53) ஐ, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ் அறவிட வேண்டிய பணங்கள், செலவுகள் மற்றும் மேற்கூறப்பட்ட திகதியிலிருந்து விற்பனை திகதி வரையான வட்டியுடனும் சேர்த்து எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிடுவதற்காக இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள "கடப்பாடுடையவரான மஹரகே த்ரினி ரொஹான் சாந்தன பெரேரா மற்றும் கடப்பாடுடையவரான/ ஈடுவைத்தவரான அட்டம்பொல ஆரச்சிகே தொன் பெலின்டஸ் இரோஷா தமயந்தி என்பவர்களினால் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஈட்டுமுறி இலக்கங்கள் 5722 மற்றும் 6204 ஆதனங்களை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், கோட்டை, பெத்தேகனை பாதை, இல. 134 ஐச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரரான பீ. கே. ஈ. சேனாதிபதி என்பவருக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கின்றதென இத்தால் தீர்மானிக்கின்றது.".

### அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கட்டுகம்பளை கோரளை வடக்கு, கட்டுகம்பளை ஹத்பத்து, குளியாப்பிட்டி மேற்கு பிரதேச செயலாளர் பிரிவு, இல. 1177 கபலாவ கிராம அலுவலர் பிரிவின் கையால எனும் இடத்தில் அமைந்துள்ள "எட்டம்பகஹமுலஹேன" என்று அழைக்கப்படும் காணி உரிமம் பெற்றநில அளவையாளர் எஸ்.எம்.திஸ்ஸாநாயக்க அவர்களால் தயாரிக்கப்பட்டு 2013, ஓகத்து 22 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 4050 (உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். எம். திஸ்ஸாநாயக்க அவர்களால் மீளளவை செய்யப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட 2000, ஓகத்து 17 என திகதியிடப்பட்ட வரைபட இல. 2792 இல் குறிப்பிடப்பட்டதுமான துண்டு 02) இல் குறிப்பிடப்பட்டதும் துண்டு 01 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாவன- வடக்கு: பிரதேச சபை பாதை; கிழக்கு: டப்ளியூ. ஏ. டீ. பொன்சேகா என்பவருக்கு உரித்துடைய காணி; தெற்கு: பீ. எம். பொடி மெனிக்கே என்பவருக்கு உரித்துடைய காணி; மேற்கு: வரைபட இல. 2792 ஆம் துண்டு 01. மற்றும் இக்காணியானது முப்பத்தெட்டு பேர்ச்சு விஸ்தீரணமுடையது (0ஏ. 0றூ. 38பே.). இது குளியாப்பிட்டி காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேவிகா ஹல்வத்துர,
முகாமையாளர் - கடன் அறவீடுகள்.

4-149

---

### ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ - தாண்டவன்வெளி கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

நாகேஸ்வரமூர்த்தி நவஜீவன்
ஏக உரிமையாளர் -நியூஅபிராமி லூமாலா சென்றர்

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2019, மாச்சு 01 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

"நாகேஸ்வரமூர்த்தி ஏக உரிமையாளர் - நியூஅபிராமி லூமாலா சென்றர் கடப்பாடு உடையவராகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. சார்பில் மட்டக்களப்பு பிரசித்த நொத்தாரிசு ஆர். காயத்திரியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 16.03.2017 ஆந் திகதியிடப்பட்ட 961 ஆம் இலக்க முறி மேலதிகமாக முழுமையாக இத்துடனான அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள தவணை கடன் வசதி வாய்ப்பாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்தினால் நாகேஸ்வரமூர்த்தி நவஜீவனுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை 23.01.2019 ஆந் திகதியன்று வரை ரூபா 90,51,307.85 (தொண்ணூறு இலட்சத்து ஐம்பத்து ஓராயிரத்து முந்நூற்று ஏழு ரூபா எண்பத்து ஐந்து சதம்) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளது அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட 961 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப் பட்டதுமான ஆதனம் சொல்லப்பட்ட ரூபா 90,51,307.85 கொண்ட பணத்தொகையை 23.01.2019 ஆந் திகதி வரையிலும், அதன் பின்னர் 24.01.2019 முதல் மேலும்

வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக தீவு முழுவதற்குமான உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் ஐ. டபிள்யூ. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.''

**அட்டவணை**

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அரசடி கிராம அலுவலர் பிரிவில் உள்ள, மட்டக்களப்பு மாநகர சபையின் எல்லைக்கு உட்பட்ட பிரிவு இலக்கம் 09 இல் உள்ள கோட்டமுனை கிராமத்தில் உள்ள பார் வீதியில் உள்ள வரிமதிப்பீட்டிலக்கங்கள் 95, 95A, 95B, 95/1/1 ஐக் கொண்டுள்ள காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ. சிங்கராஜாவினால் தயாரிக்கப்பட்ட 11.12.2014 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் AS/2014/268 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : எஸ். உதயகுமார் ; கிழக்கு : பார் வீதி; தெற்கு : பீ. இளங்கோ ; மேற்கு : சுரேஷ்குமார் அத்துடன் 0.0210 ஹெக்டயர் அல்லது எட்டு தசம் மூன்று பூச்சியம் பேர்ச் (0ஏ. 0றூ. 08.30பே.) விஸ்தீரணத்தைக் கொண்டது. இது கட்டடம் மற்றும் அத்துடனான எல்லா உரிமைகளையும் கொண்டுள்ளதுடன், மட்டக்களப்பு காணிப் பதிவகத்தில் VF E 0033/38 இன் கீழ் பதிவு செய்யப்பட்டது.

மிக அண்மைய நில அளவைக்கு அமைய மேலே குறிப்பிடப்பட்ட காணி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அரசடி கிராம அலுவலர் பிரிவில் உள்ள, மட்டக்களப்பு மாநகர சபையின் எல்லைக்கு உட்பட்ட பிரிவு இலக்கம் 09 இல் உள்ள கோட்டமுனை கிராமத்தில் உள்ள பார் வீதியில் உள்ள வரிமதிப்பீட்டிலக்கங்கள் 95, 95A, 95B, 95/1/1 ஐக் கொண்டுள்ள காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ. சிங்கராஜாவினால் தயாரிக்கப்பட்ட 22.04.2015 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் AS/2015/92 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு: எஸ். உதயகுமார் ; கிழக்கு : பார் வீதி; தெற்கு : பீ. இளங்கோ; மேற்கு : சுரேஷ்குமார் அத்துடன் 0.0210 ஹெக்டயர் அல்லது எட்டு தசம் மூன்று பூச்சியம் பேர்ச் (0ஏ. 0றூ. 08.30பே.) விஸ்தீரணத்தைக் கொண்டது. இது கட்டடம் மற்றும் அத்துடன் சகல உரிமைகளையும் கொண்டுள்ளது.

சபையின் கட்டளைப்படி,

கே. ஏ. எல். ரி. ரணவீர,
பி. பொ. மு. (சட்டம்/சபைச் செயலாளர்).

04-37/6

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ - அளுத்கம கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

வகவத் ஆராச்சிகே அசங்க பிரேமசந்திர
ஏக உரிமையாளர் - சென்ஹிரு லாண்ட்ஸ் அன்ட் கிரெடிட்

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2019, மாச்சு 01 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

வகவத் ஆராச்சிகே அசங்க பிரேமசந்திர ஏக உரிமையாளர்- சென்ஹிரு லாண்ட்ஸ் அன்ட் கிரெடிட் கடப்பாடு உடையவராகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல். சீ சார்பில் பாணந்துறை பிரசித்த நொத்தாரிசு பீ. வீ. என். டபிள்யூ. பெரேராவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 07.02.2017 ஆந் திகதியிடப்பட்ட 5515 மற்றும் 29.12.2017 ஆந் திகதியிடப்பட்ட 5845 ஆகிய இரு இலக்க முறிகள் மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 20.01.2019 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மூலம் மூன்று கோடியே தொண்ணூற்று இரண்டு இலட்சத்து ஐந்தாயிரத்து இருநூற்று பத்தொன்பது ரூபா அறுபது சதம் ரூபா 3,92,05,219.60 கொண்ட பணத்தொகை ஒன்று, தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல். சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான முதலாம் மற்றும் இரண்டாம் அட்டவணைகளில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட 5515 மற்றும் 5845 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல். சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் கொல்லப்பட்ட (ரூபா 3,92,05,219.60) கொண்ட பணத்தொகையை 21.01.2019 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக தீவு முழுவதற்குமான உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் பீ. முத்துக்குமாரணவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.''

**முதலாவது அட்டவணை**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் உள்ள பஸ்துன் கோறள மேற்கின் இத்தகொட பற்றுவில் உள்ள தொடங்கொட

பிரதேச செயலகத்தில் உள்ள பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட கிராம அலுவலர் பிரிவு இலக்கம் 800F – தொடன்கொடவில் உள்ள தொடங்கொட மேற்கில் உள்ள ஹொரகஸ்முல்ல மற்றும் புனித சாந்த எரீனா எஸ்டேட்டின் ஒரு பகுதியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நில அளவையாளர் சி. பெனரகமவினால் தயாரிக்கப்பட்ட 2016, யூலை 24 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 1189 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 10 என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட சொல்லப்பட்ட காணித்துண்டு 10 இன் எல்லைகள்– வடக்கு : எல மற்றும் அதே காணியின் மிகுதியான பகுதி; கிழக்கு : காணித்துண்டு R1 (15 அடி அகலமான வீதிக்கான ஒதுக்கீடு) ; தெற்கு : காணித்துண்டு R2 (12 அடி அகலமான வீதிக்கான ஒதுக்கீடு) மற்றும் வரைபட இலக்கம் 839 இல் உள்ள காணித்துண்டு 8 ; மேற்கு : ஹொரகஸ்முல்ல ஓவிற்ற மற்றும் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 1189 இற்கு அமைவான ஒரு றூட் மற்றும் இருபத்து மூன்று பேர்ச் (0ஏ. 1றூ. 23பே.) விஸ்தீரணத்தைக் கொண்டது, மத்துகம காணிப் பதிவகத்தில் B112/18 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

### இரண்டாவது அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில் உள்ள பாணந்துறை தொட்டமுனவின் பாணந்துறை தல்பிற்றி தெபத்தவில் உள்ள பாணந்துறை பிரதேச செயலகம் மற்றும் பாணந்துறை நகர சபை எல்லைக்கு உட்பட்ட கிராம அலுவலர் பிரிவு இலக்கம் 687C வேக்கட வடக்கில் உள்ள வேக்கடவில் உள்ள தெல்கஹாவத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். பீ. ஏ. ஜயவிக்கிரமவினால் தயாரிக்கப்பட்ட 2003, சனவரி 25 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 8704 இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 3A என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட சொல்லப்பட்ட காணித்துண்டு 3A இன் எல்லைகள் – வடக்கு : உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யூ. அகன்கமவினால் தயாரிக்கப்பட்ட 1968, திசெம்பர் 24 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 1233 இல் உள்ள காணித்துண்டு 2 ; கிழக்கு : சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 1233 இல் உள்ள காணித்துண்டுகள் 8, 6, 5 மற்றும் 4 ; தெற்கு: சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 8704 இல் உள்ள காணித்துண்டுகள் 3B மற்றும் 3C ; மேற்கு : தற்போது எம். ஜே. பர்ணாண்டோவின் காணி மற்றும் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 8704 இற்கு அமைவான இருபத்து ஆறு பேர்ச் (0ஏ. 0றூ. 26பே.) விஸ்தீரணத்தைக் கொண்டது, பாணந்துறை காணிப் பதிவகத்தில் D206/118 இன் கீழ் பதிவு செய்யப்பட்டது.

சபையின் கட்டளைப்படி,

கே. ஏ. எல். ரி. ரணவீர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

04-37/5

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ – அளுத்கம கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

வகவத் ஆராச்சிகே அசங்க பிரேமசந்திர

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2019, மாச்சு 01 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

